


மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நில அளவை பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 4 போட்டித் தேரிவின் மூலம் நில அளவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகளை கலெக்டர் பிரவீன்குமார் வழங்கினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் பத்திரிக்கை துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ஓய்வூதியத்திற்கான ஆணையை பெற்றதை முன்னிட்டு கலெக்டர் ரஞ்ஜீத்சிங்கை சந்தித்து வாழ்த்துப்பெற்றனர்.



அ.இ.அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா.விசுவநாதனுக்கு வத்தலகுண்டு அ.தி.மு.க. முன்னாள் ஒன்றிய செயலாளர் எம்.வி.எம்.பாண்டியன், ஐ.டி. விங் ஒன்றிய செயலாளர் மனோஜ் குமார் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் பிறந்தநாள் வாழ்த்து கூறினர்.




திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சேம்பர் ஆரோக்கியசாமி தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் மலர வேண்டியும் கழக துணைப் பொதுச்செயலாளர் நத்தம் இரா. விசுவநாதன் பிறந்த நாளை முன்னிட்டும் பாதாள செம்பு முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

# முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் செய்து கொண்டாட்டம்



**வத்தலகுண்டு, டிச.12-**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவை நல்லாசியுடன் கழகத்தின் பொது செயலாளர் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா விசுவநாதன் அவருடைய 77 வது பிறந்த நாளை முன்னிட்டு, வத்தலகுண்டு காளியம்மன் கோவிலில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இலக்கிய அணி ஒன்றிய செயலாளர் பாண்டி ராதா தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் மேற்கு நடராஜன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் ராமமூர்த்தி. அம்மா பேரவை செயலாளர் குமார். இளைஞர் அணி செயலாளர் தட்டி முருகன். கிளைகழக செயலாளர் ராஜா வார்டு செயலாளர் முத்துக்குமார் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய செயலாளர் மனோஜ் குமார் இணைச்செயலாளர் பாண்டியராஜன் கிளைக் கழக செயலாளர் பாண்டி மற்றும் கணேசன் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்

# பரமக்குடியில் தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் பி.ஆர். பாண்டியன் கைது கண்டித்து ஆர்ப்பாட்டம்



**பரமக்குடி, டிச.12-**

பரமக்குடி பஸ் நிலையம் அருகே வைகை பாசன விவசாய சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் பி.ஆர்.பாண்டியன் கைதை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியை சேர்ந்த பி.ஆர்.பாண்டியன் தமிழக அனைத்து விவசாயிகள் சங்க தலைவராகவும், காவிரி விவசாய சங்க பொதுச் செயலாளராக உள்ளார்.இவர் 2015 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் ஓ.என்.ஜி.சி நிறுவனத்துக்கு எதிராக நடந்த போராட்டத்தின் போது பொது சொத்துக்களை சேதப்படுத்தியதாக இவர் மீது வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இதனால் பி.ஆர்.பாண்டியன் சமீபத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.இதனைக் கண்டித்து ராமநாதபுரம் ,சிவகங்கை வைகை பாசன விவசாய சங்கத்தின் சார்பில் பரமக்குடி பஸ் நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வைகை பாசன ராமநாதபுரம் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் மதுரை வீரன் தலைமையில் நிர்வாகிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் பி. ஆர். பாண்டியனை விடுதலை செய்ய கோரி கோஷங்கள் எழுப்பினர். இதில் வைகை பாசன விவசாய சங்க நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு காவிரி விவசாய சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# கலாச்சார மாற்றத்தை உறுதி செய்யும் புக் மை ஷோ த்ரோ பேக் – 2025

**சென்னை, டிச. 12-**

2025 ஆம் ஆண்டு முடிவடையும் நிலையில், இந்தியாவின் முன்னணி பொழுதுபோக்கு தளமான புக்மைஷோ, #புக்மைஷோத்ரோபேக்2025 அறிக்கையை வெளியிடுகிறது. இது பொழுதுபோக்கு என்பது வெறும் தருணங்களைக் கடந்து, ஒரு இயக்கமாக மாறிய ஆண்டின் கொண்டாட்டமாகும். இந்த ஆண்டில் இந்தியா பொழுதுபோக்கை வெறும் நுகர்வுப் பொருளாகப் பார்க்கவில்லை; அதைத் தேர்ந்தெடுத்து, ஏற்றுக்கொண்டு, நோக்கத்துடன் வாழ்ந்து காட்டியது. சாதனை படைத்த திரைப்படங்கள் முதல் சிலிர்க்க வைக்கும் நேரடி நிகழ்ச்சிகள் வரை, 2025 ஆம் ஆண்டு இந்தியர்களுக்கு வெளியே செல்வது என்பது திடீர் முடிவு அல்ல, அது இன்றியமையாத ஒன்று என்பதை நிரூபித்தது.

இந்த அறிக்கை ஒரு தீர்க்கமான நடத்தை மாற்றத்தைக் குறிக்கிறது.எங்கு சாப்பிடச் செல்வது என்று முடிவு செய்வதைப் போலவே, பொழுதுபோக்கிற்காக வெளியே செல்வதும் ஒரு வழக்கமாகிவிட்டது. திரைப்படங்கள், இசை நிகழ்ச்சிகள், நகைச்சுவை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் வாராந்திர காலண்டர்களில் நிரந்தர இடம்பிடித்துள்ளன. நோக்கத்துடன் கூடிய அனுபவங்களைத் தேடும், பாப் கலாச்சாரத்தைத் துல்லியமாகப் பின்தொடரும், உலகத்தரம் வாய்ந்த கதைசொல்லல் மற்றும் நேரடி நிகழ்ச்சிகளை இந்தியாவிலேயே நேரில் காண விரும்பும் பார்வையாளர்கள் இவர்கள் என்பதை இது காட்டுகிறது.

## விவோவின் எக்ஸ்300, எக்ஸ்300 புரோ ஸ்மார்ட்போன்கள் மூலம் இந்திய காடுகளை படம்பிடிக்கும் காட்டுக்குள் செல்வோம் நிகழ்ச்சி

**சென்னை, டிச. 12-**

இந்திய புகைப்படக் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் விவோவின் எக்ஸ்300, எக்ஸ்300 புரோ ஸ்மார்ட்போன்கள் மூலம் இயற்கை எழில் கொஞ்சும் அடர்த்தியான இந்திய காடுகள் மற்றும் வன விலங்குகளை படம்பிடிக்கும் ‘காட்டுக்குள் செல்வோம்’ நிகழ்ச்சியை நேஷனல் ஜியோகிராபிக் கிரியேட்டிவ் ஒர்க்ஸ் உடன் இணைந்து விவோ அறிவித்துள்ளது. வனவிலங்குகளின் வாழ்க்கை முறை மற்றும் இயற்கையின் அற்புதங்களை மிகத் துல்லியமாக படம் பிடித்து ஆவணப்படுத்த உள்ளது.விவோ எக்ஸ்300 மற்றும் எக்ஸ்300 புரோ ஆகிய மாடல் ஸ்மார்ட்போன்கள் தொழில்முறைத் தரத்திலான ஜெய்ஸ் ஆப்டிக்ஸ், புதிய ஆரிஜின்ஓஎஸ் 6, மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவுத் திறன்கள் மற்றும் மீடியாடெக் டைமென்சிட்டி 9500 மூலம் இயக்கப்படும் முதன்மை நிலை செயல்திறன் ஆகியவற்றை ஒன்றிணைத்து வழங்குகிறது. இதில் உள்ள 200எம்பி ஜெய்ஸ் முதன்மை கேமரா, விவோ போர்ட்ரெய்ட் எஞ்சின் மற்றும் ஏஐ லேண்ட்ஸ்கேப் மாஸ்டர் ஆகிய தொழில்நுட்பங்கள் சினிமாப் படங்களைப் போன்று புகைப்படங்களை எடுக்கும் திறன் கொண்டவையாகும்.

பறவைகளை துல்லியமாக படம் பிடிக்கும் 200எம்பி ஜெய்ஸ் ஏபிஓ டெலிபோட்டோ கேமராவுடன் வெளிவந்த இந்தியாவின் முதல் ஸ்மார்ட்போன் எக்ஸ்300 புரோ ஆகும். இதில் உள்ள டெலிபோட்டோ எக்ஸ்டெண்டர் கிட், 8.5 மடங்கு வரை ஆப்டிகல் ஜூம் செய்ய உதவுகிறது.இது குறித்து விவோ இந்தியாவின் கார்ப்பரேட் ஆலோசனைப் பிரிவு தலைவர் கீதாஜ் சன்னானா கூறுகையில், எங்கள் இமேஜிங் நிபுணத்துவத்தை மேம்பட்ட ஏஐ மற்றும் ஆப்டிகல் கண்டுபிடிப்புகளுடன் இணைத்து, அற்புதமான தெளிவு மற்றும் உணர்ச்சிபூர்வமான தருணங்களைப் படம்பிடிக்கிறது. இந்த கூட்டணியின் மூலம், ஸ்மார்ட்போன் மூலம் உண்மையில் என்ன சாதிக்க முடியும் என்பதை நாங்கள் வெளிப்படுத்த விரும்புகிறோம். எங்கள் எக்ஸ்300 மாடல், குறைந்த வெளிச்சம், பரந்த நிலப்பரப்புகள் மற்றும் வேகமாக ஓடும் வனவிலங்குகள் போன்ற அனைத்து சூழல்களிலும் புகைப்படங்கள் எடுக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், நேஷனல் ஜியோகிராபிக் கிரியேட்டிவ் ஒர்க்ஸ் உடன் எங்கள் கூட்டாண்மை, இந்தத் திறன்களை மிகவும் உண்மையான சூழலில் வெளிப்படுத்த இருக்கிறது என்று கூறினார்.

## ராயல்ஓக் ஃபர்னிச்சர் ராமநாதபுரத்தில் தனது பிளாக்ஷிப் ஸ்டோரை திறந்து, சர்வதேச கலெக்ஷனை அறிமுகப்படுத்தியது

**இராமநாதபுரம், டிச. 12-**

இந்தியாவின் நம்பர் 1 ஃபர்னிச்சர் பிராண்டான ராயல்ஓக் ஃபர்னிச்சர் தனது முதன்மை பிளாக்ஷிப் ஸ்டோரையும் கண்ட்ரி ஸ்டோர் கலெக்ஷனையும் இராமநாதபுரத்தில் அறிமுகப்படுத்தியது. இந்த விழாவில் ராமநாதபுரம் இன்கார்பரேஷன் பிரைவேட் லிமிடெட் தலைவர் ஸ்ரீ.விஜய் சுப்பிரமணியம், ராயல்ஓக் இன்கார்பரேஷன் நிர்வாக இயக்குநர் ஸ்ரீ.மதன் சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பாக கலந்து கொண்டனர். 10,000 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவில் அமைந்த இந்த ஸ்டோர், லிவிங் ரூமிலிருந்து படுக்கையறை, அலுவலகம், வெளிப்புறம் உள்ளிட்ட வீட்டு அனைத்து தேவைகளுக்கும் சர்வதேச தரத்திலான ஃபர்னிச்சர்களை ஒரே இடத்தில் வழங்குகிறது.இந்த திறப்பு விழாவில் பிரான்சைஸ் தலைவர் கிரண் சபாரியா, விஎம் & நியூ ஸ்டோர் ஓப்பனிங் தலைவர் தம்மையா கோடேரா, டிஎன்& கேரளா பிராந்தியத் தலைவர் ரஞ்சித் கப்பட்டு, கிளஸ்டர் மேலாளர் சுரேஷ் குமார், பிரான்சைசி கூட்டாளர்கள் எஸ்.தீபக், வி.ஜி.ஜெகன்,ஜி. கார்த்திக் உள்ளிட்ட ராயல்ஓக் குழுவினர் பங்கேற்றனர்.

இந்த திறப்பு விழாவில் உரையாற்றிய ராயல்ஓக் தலைவர் விஜய் சுப்பிரமணியம் கூறுகையில், ராமநாதபுரத்தில் ஸ்டோர் தொடங்கியது மிக முக்கிய முன்னேற்றம் என்றும், பான் இந்தியா மற்றும் யூஏஇ முழுவதும் 200+ ஸ்டோர்களுடன் செயல்படும் நிலையில், இப்பகுதி வாடிக்கையாளர்களின் அதிகரிக்கும் தேவைகளை குறைந்த செலவில் தரமான, சர்வதேச தரத்திலான ஃபர்னிச்சர்களுடன் பூர்த்தி செய்யத் தயாராக உள்ளது. ராமநாதபுரம் மக்களின் ஆதரவால் இந்த சந்தை வேகமாக வளரும் என்ற நம்பிக்கையையும் அவர் பகிர்ந்து, பிராஞ்சைஸ் கூட்டாளர்களுக்கு வாழ்த்துக்கள் என்று கூறினார்.

## முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விஸ்வநாதன் பிறந்தநாள் விழா:
# வத்தலக்குண்டுவில் ஒன்றிய இளைஞரணி சார்பில் ஆதரவற்றோர் குழந்தைகள் காப்பகத்தில் கேக் வெட்டி கொண்டாட்டம்



**வத்தலகுண்டு,டிச.12-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் தட்டி முருகன் சார்பில் அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா விஸ்வநாதன் எம்.எல்.ஏ. பிறந்தநாள் விழாவையொட்டி வத்தலகுண்டு அருகே கணவாய்ப்பட்டி ஆசிரமக் காலனியில் உள்ள ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் மாணவ மாணவிகளுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினார்கள்.

பின்னர் குழந்தைகளுக்கு காலை உணவை அன்னதானமாக மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் தட்டி முருகன் வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் தம்பிராஜா,நகர எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் ராஜேந்திரன், மாணவரணி ஒன்றியசெயலாளர்செல்லப்பாண்டி,விவசாய அணி ஒன்றிய தலைவர் செல்வராஜ்,ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர்பாண்டி, சேவுகம்பட்டி பேரூர் கழக துணைச் செயலாளர் ரமேஷ்,சேவுகம்பட்டி நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் மதன், ஐ.டி. விங். செல்வம். எழுவனம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமதாஸ்,மாவட்ட பாசறை துணைச் செயலாளர் கௌதம்,ஒன்றிய பிரதிநிதி கணேசன், கணவாய்ப்பட்டி ஊராட்சி கிளைச் செயலாளர்கள் அன்பு,கருப்புசாமி,வத்தலகுண்டு முன்னாள் வார்டு செயலாளர் முத்துக்குமார் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திருமங்கலம் ரஜினி கோவிலில் சிறப்பு பூஜை:
# ரஜினியின் 75-வது பவளவிழா பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாட்டம்



**திருமங்கலம். டிச.12-**

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 75-வது பிறந்தநாளை முன்னிட்டு திருமங்கலம் நகரில் அமைந்துள்ள ஸ்ரீரஜினி கோவிலில் மூலவர் உற்சவர் சிலைகளுக்கு காசுமாலை மற்றும் நாககிரீடம் அணிவித்து பவளவிழா சிறப்பு பூஜையும் கேக் வெட்டி கொண்டாட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

மதுரை மாவட்டம்,திருமங்கலம் சீயோன் நகரிலுள்ள ரஜினி அவென்யூவில் நடிகர் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும்,முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக் இந்தியாவிலே முதல் முறையாக அமைத்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் நாள் தோறும் பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதனிடையே ரஜினிகாந்தின் 75வது பிறந்த நாள் இன்று கோலாகலமாக கொண்டாடப் படுகிறது.இதையொட்டி ரஜினி பக்தர்களின் ஆன்மீக வழிபாட்டு திருத்தலமாக திகழ்ந்திடும் திருமங்கலம் ரஜினி கோவிலில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 75-வது பவளவிழா பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜையுடன் வழிபாடு மற்றும் கேக்வெட்டி கொண்டாட்டங்கள் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

முதல் நிகழ்வாக உற்சவர் ரஜினி சன்னதி முன்பு எல்இடி விளக்குகளுடன் ரஜினி படங்கள் கொண்ட கேக் வெட்டப்பட்டு ரசிகர்களுக்கு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து ரஜினியின் மூலவர் மற்றும் உற்சவர் சிலைகளுக்கு உத்தரகோசமங்கையிலிருந்து தரவைக்கப்பட்ட காசுமாலை மற்றும் நாககிரீடம் அணிவிக்கப் பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அப்போது ரஜினி காந்த் நீண்ட ஆயுளுடன் நல்ல உடல் நலத்துடன் 100 ஆண்டுகள் வாழ்ந்திட வேண்டி ரஜினி உற்சவர் சிலைக்கு வேத மந்திரங்கள் முழங்கிட பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், பூந்தி புஷ்பம் ஆகிய பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை நடைபெற்றது. இந்த பூஜை நிகழ்வுகளை தீவிர ரஜினி பக்தரும், முன்னாள் ராணுவ வீரரும்,திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனருமான எஸ்.கார்த்திக் மற்றும் அவரது குடும்பத்தினர் சிறப்புடன் நடத்தினர்.

இதனை தொடர்ந்து ரஜினியின் 75வது பிறந்த நாளை முன்னிட்டு 7500 ரஜினி படங்கள் ஒட்டப்பட்ட புகைப்பட கண்காட்சியும், 75 மொழிகளில் ரஜினிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்திடும் பேனரும், ரஜினியின் பழைய கருப்பு வெள்ளை போட்டோக்களை எடுத்து 75 என நம்பராக மாற்றி வைக்கப்பட்ட வாழ்த்து, ரஜினி படங்கள் ஒட்டப்பட்ட சீலிங் பேன் மற்றும் பசை மற்றும் வண்ண துகள்கள் கொண்டு வரையப்பட்ட ஓவியமும் ரஜினி ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இது குறித்து ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் கூறுகையில்: எங்கள் குல தெய்வம் மனித கடவுள் ரஜினியின் 75வது பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் ரஜினி கோவிலில் கேக் வெட்டியும் சி றப்பு பூஜைகள் நடத்தியும் கொண்டாட் டங்கள் நடைபெற்றது.

பவள விழா காணும் ரஜினிகாந்த் நூறாண்டு பிறந்த நாள் விழா கண்டு மக்களுக்கு சேவை செய்திட வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பாக உள்ளது என்று தெரிவித்தார். ரஜினியின் 75வது பவள விழா பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் நடைபெற்ற சிற ப்பு பூஜை மற்றும் கொண்டாட்டங்கள் ரஜினி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது.

# சிவகாசி அருகே பள்ளி தாளாளர் வீட்டில் கொள்ளை முயற்சி

**சிவகாசி, டிச. 12-**

சிவகாசி அருகே திருப்பதி நகர் பகுதியைச் சேர்ந்தவர் செல்ல பாண்டியன் வயசு 63 இவரது மனைவி லதா இவர்கள் எம்.புதுப்பட்டி பகுதியில் பள்ளி நடத்தி வருகிறார்கள். இப்பள்ளிக்கு செல்ல பாண்டியன் தாளாளராகவும் லதா முதல்வராகவும் உள்ளனர். இந்நிலையில் இவர்கள் கடந்த 4ந் தேதி வீட்டை பூட்டிவிட்டு சென்னையில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு செவ்வாய்க் கிழமை திரும்பி வந்த பார்த்தபோது வீட்டின் முன் பக்க ஜன்னல் கம்பி அறக்கட்டிருப்பது தெரிய வந்தது. வீட்டின் உள்ளே பீரோவில் இருந்த துணிகள் வெளியே சிதறி கிடந்துள்ளது. தகவல் அறிந்து வந்த போலீசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் செல்லபாண்டியன் நகைகளை வங்கியில் உள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்துள்ளதாகவும் வீட்டில் பணம் ஏதும் வைக்கவில்லை எனவும் கூறியுள்ளார். இதை அடுத்து கைரேகை நிபுணர்கள் வீட்டில் ஆய்வு செய்தனர் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. இது குறித்த புகாரின் பேரில் திருத்தங்கள் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



தேசிய மனித உரிமை தினத்தை முன்னிட்டு பிரெஸ்ட் சட்டக்கல்லூரி முதல்வர் சாஷி, வழக்கறிஞர்கள் சுபலதா, ரம்யா, டோமினிக் ஷினோகா மற்றும் சட்ட மாணவர்கள் சிவகங்கை மாவட்டம் பூவந்தி பூங்குடில் முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்

# கடலாடி அருகே சேதமான மின்சார கம்பத்தை மாற்ற விவசாயி கோரிக்கை



**கடலாடி, டிச.12-**

கடலாடி அருகே வீட்டின் எதிரேயுள்ள சேதமான மின் கம்பத்தை மாற்றிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகாவைச் சேர்ந்த ஒருவானேந்தல் கிராமத்தில் 100 க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் உள்ளன.

இக்கிராமத்திற்கான மின்சார வசதி கடலாடியில் உள்ள மின்துறை அலுவலகத்தில் இருந்து தான் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒருவானேந்தல் கிராமத்தின் பேருந்து நிலையம் எதிரே உள்ள மின் கம்பம் சேதமடைந்து சாயும் நிலையில் உள்ளன.இந்த மின் கம்பத்தின் அருகேயே 5 வீடுகள் உள்ளன.மின் கம்பம் சேதமடைந்துள்ளதால் காற்று அதிகமாக வீசினாலோ அல்லது மழை பெய்தால் வீட்டில் யாரும் தங்க முடியாத நிலை ஏற்படுகிறது.ஏனென்றால் மின்கம்பம் சாய்ந்து விடும் என்ற பயத்தில் வீட்டின் உள்ளே நிம்மதியாக தூங்க முடியாத அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இது குறித்து பாலமுருகன் என்பவர் கூறுகையில். 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மின் கம்பம் நடப்பட்டுள்ளது.அதனால் அனைத்து பகுதிகளிலும் சேதமடைந்துள்ளது. வீட்டில் நிம்மதியாக தூங்க முடியவில்லை.குழந்தைகளை வைத்து கொண்டு சிரமப்பட்டு வருகிறோம்.தமிழக அரசு தான் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு கூறினார்

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# 50 தூய்மை பணியாளர்களுக்கு ரெயின் கோட் வழங்கப்பட்டது

மேலூர் சுப்ரீம் அரிமா சங்கத்தின் சார்பில்



**மேலூர், டிச.12-**

மேலூர் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு மழைக்காலத்தின் போது பாதுகாப்பு வேண்டி ரெயின்கோட் ஆடையை மேலூர் சுப்ரீம் அரிமா சங்கத்தின் சார்பாக முதற்கட்டமாக 50 நபர்களுக்கு நேற்று 11 ந்தேதி நகராட்சி அலுவலகத்தில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மேலூர் சுப்ரீம் அரிமா சங்கத்தின் தலைவர் லயன்.பி. ஸ்ரீ கண்ணன், சங்க நிர்வாகி லயன் எம். கிருஷ்ணன் என்ற கிச்சா மற்றும் வழக்கறிஞர்

லயன்.சிக்கந்தர் சித்திக், லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் மற்றும் மேலூர் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி, மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் நகர சுகாதார ஆய்வாளர் தினேஷ்குமார், சுகாதார மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரம் அருகே பரபரப்பு:

# மூடியிருந்த கேட்டை கடந்த பைக் மீது ரயில் மோதி விபத்து

**ராமநாதபுரம், டிச. 12-**

மூடியிருந்த ரயில்வே கேட்டை கடக்க முயன்ற பைக் மீது ரயில் மோதிய சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து கன்னியாகுமரி நோக்கி இரவு எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டது. இந்த ரெயில் உச்சிப்புளி அருகே வந்தது. இதற்காக புதுமடம் ரெயில்வே கேட் மூடப்பட்டு இருந்தது.

இந்தநிலையில் வாலிபர் ஒருவர், மோட்டார்சைக்கிளில் அங்கு வந்தார். ரெயில்வே கேட் மூடி இருந்தும், அதை கடந்து செல்ல முயன்றார். தண்டவாளத்தின் நடுப்பகுதியில் அவர் சென்ற போது ரெயில் வேகமாக வந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதனால் உடனடியாக அவர் தனது மோட்டார்சைக்கிளை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். தண்டவாளத்தில் கிடந்த மோட்டார்சைக்கிள் மீது கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில் வேகமாக மோதியது.

மேலும் மோட்டார்சைக்கிள் சேதம் அடைந்து, ரெயில் என்ஜின் அடியில் சிக்கியது. சுமார் 100 மீட்டர் தூரம் வரை இழுத்து செல்லப்பட்டது. இதைப் பார்த்த ரெயில் என்ஜின் டிரைவர் உடனடியாக ரெயிலை நிறுத்தி கீழே இறங்கி வந்து பார்த்தார். பின்னர் அவர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் ரெயிலுக்கு அடியில் சிக்கிய மோட்டார்சைக்கிளை வெளியே கொண்டு வந்தார். மேலும் இதுகுறித்து ரெயில்வே உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து ரெயில் அங்கிருந்து சிறிது நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றது. நல்லவேளையாக மோட்டர்சைக்கிள் பெட்ரோல் டேங்க் உடைந்து தீப்பிடிக்கவில்லை. மோட்டார் சைக்கிளை தண்டவாளத்தில் போட்டுவிட்டு ஓடிய வாலிபர் யார்? என்பது குறித்து ராமநாதபுரம் ரயில்வே பாதுகாப்பு படை பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மதுரை கலெக்டர் அலுவலகத்திற்கு மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல்

**மதுரை, டிச.12-**

மதுரை கலெக்டர் அலுவலகத்திற்கு மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தனர்.

மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மர்ம நபர்கள் மின்னஞ்சல் மூலம் நேற்று மிரட்டல் விடுத்தனர். இதையடுத்து மோப்ப நாய்கள் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள் கலெக்டர் அலுவலகத்தில் தீவிர சோதனை மேற்கொண்டனர். இதேபோல், திருப்பரங்குன்றம் மலையில் உள்ள சிக்கந்தர் தர்காவிற்கும் மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதையடுத்து அந்த இடத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர். இரு இடங்களிலும் நடந்த சோதனையில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படாததால் வெடிகுண்டு மிரட்டல் போலியானது என அதிகாரிகள் உறுதி செய்தனர். தொடர்ந்து மிரட்டல் விடுத்த நபர்கள் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மரம் மனிதனின் உரம்

# உதவிப்பேராசிரியர் தேர்வு: ஹால் டிக்கெட் வெளியீடு

**சென்னை, டிச. 12-**



உதவிப் பேராசிரியர் தேர்விற்கு ஹால் டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் தங்களுடைய ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.04/2025, நாள் 16.10.2025 இன்படி 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கான உதவிப்பேராசிரியர் தேர்வு எதிர்வரும் 27.12.2025 அன்று (காலை மற்றும் மாலை) நடத்தப்பட உள்ளது. இத்தேர்வு 38 மாவட்டங்களிலும் 195 மையங்களில் நடைபெற உள்ளது.

தேர்வர்கள் தேர்வு நடைபெறும் மையம் சார்ந்த விவரங்கள் தேர்வர்களின் நுழைவுச் சீட்டில் உள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கு நுழைவுச் சீட்டு ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் (https://www.trb.tn.gov.in/) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. என வே, தேர்வர்கள் 11.12.2025 முதல் அவர்களது பயனர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து தங்களுக்குரிய நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்வதில் ஏற்படும் இடர்பாடு மற்றும் அதன் தொடர்பான ஐயங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறை தீர்க்கும் மையத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வு மையங்கள் மாற்றம் சார்ந்த கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய படைப்பாளர்களின் வெற்றிக்கு உலக பாராட்டு

**சென்னை, டிச.12-**

திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிரபலங்கள் பற்றிய தகவல்களுக்கான உலகின் மிகவும் பிரபலமான மற்றும் அதிகாரப்பூர்வ மூலமாகமான விளங்கும் IMDb (www.imdb.com), 2025 ஆம் ஆண்டின் மிகப் பிரபலமான 10 இந்திய திரைப்படங்கள் மற்றும் 10 தொலைக்காட்சித் தொடர்களின் பட்டியலை இன்று வெளியிட்டது. இந்த வருடாந்திர IMDb தரவரிசைப் பட்டியல், உலகம் முழுவதும் உள்ள திரைப்படங்கள் மற்றும் தொடர்களில் என்ன பார்க்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்து முடிவு செய்ய IMDb-தளத்தை நம்பியுள்ள 250 மில்லியனுக்கும் அதிகமான உண்மையான மாதாந்திர பார்வையாளர்களின் நேரடி வருகையை அடிப்படையாகக் கொண்டது.

"இந்த 2025 ஆம் ஆண்டு மிகவும் பிரபலமான இந்திய திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர் தரவரிசைப் பட்டியல்கள், இந்திய படைப்பாளர்களின் துணிச்சலையும் புத்தாக்க திறமையையும் காட்சிப்படுத்துகின்றன," என்று IMDb இந்தியா தலைவர் யாமினி பட்டோடியா கூறினார். "காதல் முதல் அனிமேஷன் வரை, காவிய சூப்பர்ஹீரோ நாயகன் முதல் நையாண்டி வரையிலான பல வேறு வகை கதைக்களங்களை உள்ளடக்கி காட்சிப்படுத்தியிருப்பது இந்தத், துறையின் உயிர்த் துடிப்பை பிரதிபலிக்கிறது. தனித்துவம் மிக்க இந்திய கதைகள் மற்றும் கலாச்சார வெளிப்பாடுகள் உலகெங்கிலுமுள்ள பார்வையாளர்களின் உணர்வோடு ஒத்திசைந்து இயங்குவதை காண்பது மிகவும் உற்சாகமளிக்கிறது.."

"IMDb 2025 தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை பிடித்து மிகவும் பிரபலமான இந்திய திரைப்படமாக முன்னணி வகித்த சாயாரா திரைப்படத்தின் தாரிப்பாளர் மற்றும் யாஷ் ராஜ் ஃபிலிம்ஸ் CEO அக்ஷய் விதானி கூறினார்,

"IMDb 2025 தரவரிசைப் பட்டியலில் சாயாரா மிகவும் பிரபலமான நம்பர் 1 திரைப்படமாக தேர்வு செய்யப்பட்டிருப்பது, YRF-ல் உள்ள எங்கள் அனைவருக்கும் ஒரு ஈடு இணையற்ற மிகுந்த பெருமையைத் தரும் ஒரு தருணமாக விளங்குகிறது."

# டிஜிட்டல் பாதுகாப்பில் புதிய மைல்கல் - குடும்பத்திற்கே பாதுகாப்பு கவசம் தரும் ட்ரூகாலர் அம்சம்

**சென்னை, டிச.12-**

டிஜிட்டல் பாதுகாப்பை ஒரு பகிர்ந்து கொள்ளப்படும் அனுபவமாக மாற்றியமைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முக்கியமான ஒரு புத்தாக்க சிறப்பசமான ஃபேமிலி ப்ரோடெக்ஷன் வசதியை அறிமுகப்படுத்தியிருப்பதை ட்ரூ காலர் இன்று அறிவித்தது. ஆண்ட்ராய்ட் மற்றும் iOS இரண்டு தொழில்நுட்ப தளங்களிலும் ட்ரூகாலர் ஆப் இல் நேரடியாக உள்ளடக்கப்பட்ட இந்த ஃபேமிலி பிரோடெக்ஷன் வசதியானது, மோசடி அழைப்புக்கள் மற்றும் தேவையற்ற அழைப்புகளுக்கு எதிராக நிகழ்நேர பாதுகாப்பை வழங்கும் வகையில், குடும்பத்தினர்களுக்கிடையே ஒரு நம்பகமான குழுக்களை உருவாக்க உதவுகிறது. ஆண்ட்ராய்ட் தொழில்நுட்ப கைபேசிகளில், ஒரு குடும்ப நிர்வாகி, அவரது இதர குடும்ப உறவினர்களுக்கும் வரும் சாத்தியக்கூறுள்ள மோசடி அழைப்புக்கள் குறித்த எச்சரிக்கை அறிவிப்புக்களை பெறுவார் அதைத் தொடர்ந்து மற்றும் அத்தகைய மோசடி அழைப்புகளை தொலைதூரத்தில் இருந்து கொண்டே துண்டித்துவிடலாம்.

"ட்ரூகாலர் சேவைகள், ஏற்கனவே அனைத்து குடும்ப உறுப்பினர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிற நிலையில் இப்போது தொழில்நுட்ப திறன் குறைவான குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாக்க, குடும்பத்தின் "CTO"- வுக்கு வை நாங்கள் அதிகாரம் அளிக்கிறோம்" என்று ட்ரூகாலர் தலைமை நிர்வாக அதிகாரி ரிஷித் ஜுன்ஜுன்வாலா கூறினார்.

ஃபேமிலி ப்ரோடெக்ஷன் ஒரு இலவச தொழில்நுட்ப அம்சமாக இருந்த போதிலும், ஈடுபாடு மற்றும் நீண்ட கால வருவாய்க்கான ஒரு புதிய வழிமுறையை வழங்குகிறது. குடும்பங்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவுவதன் மூலம், ட்ரூகாலர், அவர்களின் அன்றாட தகவல்தொடர்புகளில் தனது பங்களிப்பை மேலும் வலுப்படுத்துகிறது மற்றும் ஒரு பகிரப்பட்ட பாதுகாப்பு அடுக்கை கூடுதலாக சேர்த்து மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது.

# கோவையில் மாபெரும் பிளாஸ்டிக், கழிவு தொழில்நுட்பம், உணவு, பானம், பால் என ஐந்து தொழில் கண்காட்சிகள் ஒரே இடத்தில் துவங்கியது

**கோவை, டிச.12-**

நாட்டின் முன்னணி பி 2 பி (தொழில் முதல் தொழில்) கண்காட்சியை மீடியா டே மார்க்கெட்டிங் என்ற நிறுவனம் நேற்று கோவை கொடிசியா வளாகத்தில் துவக்கியுள்ளது. ஒரே நேரத்தில் ஐந்து முக்கிய தொழில்துறை கண்காட்சிகள் இங்கு நடைபெறுகின்றது. நேற்று டிசம்பர் 11 முதல் 13 வரை நடைபெறும் இந்த கண்காட்சியில் பிளாஸ்டிக் மற்றும் கழிவு தொழில்நுட்பம், உணவு, பானம், பால் ஆகிய துறைகள் சம்பந்தமான இயந்திரங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஐந்து கண்காட்சிகளிலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 180-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இதனை தமிழக பால் மற்றும் பால் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறுகையில், கடந்த 5 ஆண்டுகளாக எத்தனையோ தடைகளைத் தாண்டி ஆவின் இன்று உறுதியாக நிற்கிறது. மக்களுக்கு விலைச் சுமை இல்லாமல், பால்-பொருட்கள் வீணாகாமல் பார்த்துக்கொள்கிறோம். பால் பொருட்களுக்கு ஜிஎஸ்டி இல்லை என்கிற உண்மையைக்கூட பலருக்கு இன்னும் தெரியவில்லை என்றார். நிகழ்வில் தென்னிந்திய தோட்டக்கலை சங்க (உப்பாசி), அஜய் திப்பையா, உட்பட தொழில் தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

பால் மற்றும் உணவுத் துறையில் பங்கேற்கும் நிறுவனங்களில் அரோமா மில்க் புராடக்ட்ஸ், நெக்ஸ்ட் ஜென் டெய்ரி டெக், கண்டினென்டல் காபி, சன் டிப்ஸ், ஸ்பைசிஸ் லிமிடெட், விண்ட்சர் சாக்லேட்டியர், அம்ருதா காபி, தி யூனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்ஸ் நிறுவனம், சோட்டு கிசான் ஆகியவை அடங்கும்.பிளாஸ்டிக் மற்றும் கழிவு தொழில்நுட்பத் துறையில் பங்கேற்கும் நிறுவனங்களில் பிரேக்ஸ் இந்தியா, முந்த்ரா மாஸ்டர்பேட்சஸ், ப்ரோமேக் இண்டஸ்ட்ரீஸ், வர்த்மான் இண்டஸ்ட்ரீஸ், ரெய்னி இண்டஸ்ட்ரீஸ், எக்ஸ்ட்ரூஷன் டெக், எஸ்.எல்.பி. குழுமம், ஆதிநாத் பாலிமர்ஸ், ப்ரோ பைப்ப்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், இஷித்வா ரோபாட்டிக்ஸ் சிஸ்டம், கப்சன் ரிசோர்சஸ் கார்ப்பரேஷன் ஆகியவை உள்ளன.பொதுமக்கள் மற்றும் தொழில் நிபுணர்கள் அனைவருக்கும் நுழைவு கட்டணம் இலவசம். டிசம்பர் 11 முதல் 13 வரை தினமும் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை கண்காட்சிகள் திறந்திருக்கும். மேலும் தகவல்களுக்கு 9341473494 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**


## காணவில்லை

கடந்த 28.11.2025ந் தேதி பூவந்தி அருகே வரும்போது கைபையில் இருந்த சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் ஆவண எண் கள்.1239/2006,1240/2006 (வேம்பத்தூர் கிராமம் சர்வே எண்.402/1, 402/15) தொலைந்து விட்டது. மேற்கண்ட அசல் ஆவணங்களை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வசந்தா
செம்பூர், திருப்புவன் தாலுகா
சிவகங்கை மாவட்டம்.
செல் எண்.8524962693

## NAME CHANGE

I, AROCKIASAMY, S/O SEBASTIAN, residing at Door No.2/703, Vaikai Nagar, North Street, Illupakudi, Karaikudi Taluk, Sivagangai District- 630202, Tamilnadu , India, Shall hence for the be known as AROCKIAM S/O SEBASTIRAJ
AROCKIASAMY SEBASTIAN
Illuppakudi.

## பொது அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், விராலிபட்டி கிராமத்தில் நத்தம் பு.புல எண்.1404, உட்பிரிவு 17, ப.புல எண்.259/1-ல் உள்ள 1.25 ஏர்ஸ் சொத்து திரு. வெங்கிடுசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு 2 ஆண், 3 பெண் வாரிசுகள் உள்ளனர். ஆனால் உண்மை வாரிசுகளுக்கு தெரியாமல் வனிதா என்பவர் 2412-ல் என்ற எண்ணில் போலியாக பட்டா பெற்று வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயலுவதாக தெரியவருகிறது.

ஆகவே மேற்படி சொத்தை யாரும் விற்கவோ, வாங்கவோ வேண்டாம் என்று இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

P.அருண்பிரசாத் B.Sc., B.L.,
அட்வகேட், திண்டுக்கல்.

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)
ஓ.மு.எண் : 7455/2025/அ.3
P.கண்ணபிரான்,
S/o. பச்சைமுத்து,
கருப்புகால்,
வரிச்சியூர் போஸ்ட்,
மதுரை கிழக்கு வட்டம்,
மதுரை மாவட்டம்.
..... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மதுரை கிழக்கு வட்டம்
....... எதிர்மனுதாரர்

மனுதார் P.கண்ணபிரான் என்பவரின் தந்தை பச்சை முத்து 12.12.1999-ம் தேதியில் மதுரை மாவட்டம்,மதுரை கிழக்கு வட்டம், வரிச்சியூர் போஸ்ட், கருப்பு கால் கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை கருப்பு கால் கிராம அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

P.கண்ணபிரான்
மனுதாரர்

## காணவில்லை

கடந்த 02.12.2025ந் தேதி கோர்ட்டு வாசல் அருகே வரும்போது கைபையில் இருந்த சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவண எண்.1426/1984 (புதுப்பட்டி கிராமம் பழைய சர்வே எண்.93/3, புதிய எண்.93/3A1, 93/3A3) தொலைந்துவிட்டது. மேற்கண்ட அசல் ஆவணங்களை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சரசு
புதுபட்படடி, சக்கந்தி போஸ்ட்
சிவகங்கை.
செல் எண்.9952874385

உட்கோட்டம் நிர்வாக நடுவர் நீதிமன்றம் மற்றும் பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
P.மயில்சாமி
த-பெ. பழனிச்சாமி
பெருமாள்கவுண்டன்வலசு
(எ) பாலமரத்துப்பட்டி,
சக்கம்பட்டி அஞ்சல்,
ஓடைப்பட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
......மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான், எனது தந்தையின் தகப்பனார் (தாத்தா) ரங்கசாமிகவுண்டர் அவர்கள் கடந்த 07.09.1993-ம் தேதி அன்று, மேற்படி மனுதாரராகிய எனது மேற்படி முகவரி இல்லத்தில் இறந்ததை அறியாமையின் காரணமாக உரிய அலுவலகத்தில் பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்சமயம் உட்கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டி மனுத் தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15 தினங்களுக்குள் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தல் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் :-
P.மயில்சாமி
த-பெ. பழனிச்சாமி
பெருமாள்கவுண்டன்வலசு
(எ) பாலமரத்துப்பட்டி,
சக்கம்பட்டி அஞ்சல்,
ஓடைப்பட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

## காணவில்லை

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், வேலுநாச்சியார் தெருவில் கதவு எண்.9 என்ற முகவரி கொண்ட ஓட்டுவீடானது பூட்டப்பட்டு இருந்த நிலையில் எனது பாட்டனார் திரு.சுப்பிரமணியன் பெயரில் உள்ளதும் எங்களுக்கு சொந்தமான நிலங்களின் சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் 247/1979(மேலவாணியங்குடி குருப், காத்தட்டிவயல் கிராமம் ஜி.ஆர் சர்வே எண்.109/113), சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்தில் 462/1987, 1043/1979 (பையூர் பிள்ளைவயல் குருப் சர்வே எண்கள்.70/7, 158/13) கடந்த 02.12.2025ந் தேதி வீட்டில் பார்த்தபோது அசல் ஆவணங்கள் தெலைந்தது தெரியவந்தது. எனவே மேற்கண்ட அசல் ஆவணங்களை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ம.கார்த்திகேயன்
26, முத்துராமலிங்கம் தெரு
சிவகங்கை. செல் எண்.7904988074

'துணிப்பையை கையில் எடுப்போம்' 'பிளாஸ்டிக் பையை கைவிடுவோம்'

## தமிழ்நாடு அரசு மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சி

ந.க.எண். 385/ 2025 நாள்: 10 12.2025

### தூய்மை பணியாளர்கள் - காலை உணவு திட்டம் 2025-2026

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறைகள்)

1. பரவை சிறப்புநிலை பேரூராட்சியில் 2025-2026 ஆம் ஆண்டு தூய்மை பணியாளர்கள் காலை உணவு திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்ததாரர் உணவு கட்டுப்பாட்டு துறையின் மூலம் வழங்கப்படும் தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ்களை பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
2. இப்பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.
3. பணிகளுக்குரிய ஒப்பந்தப்படிவங்களை 10.12.2025ம் தேதி முதல் 17.12.2025 ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை E-Token / Digital Signature card யை உபயோகித்து https://tntenders.gov.in என்ற இணைய தளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. டேவணி தொகையினை செயல் அலுவலர், பரவை பேரூராட்சி முகவரியில் உள்ள வங்கி கணக்கு . 1460101005766 IFS Code CNRB0001460 Online மூலம் செலுத்த வேண்டும்.
5. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 17.12.2025ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திறக்கப்படும்.
6. இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில், நேரில் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | காப்புத் தொகை (1%) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | பரவை பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு விநியோகம் செய்தல் (ஒரு வருடத்திற்கு) | 12.86 | 12860 | 365 நாட்கள் |
| | மொத்தம் | 12.86 | 12860 | |

(ஓம்) திருமதி.நூ.ஜீலான்பானு,
செயல் அலுவலர்
பரவை சிறப்புநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

வெ.ஆ. எண்-288
செ.ம.தொ.அ.மதுரை. நாள்:- 11-12-2025

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். உசிலம்பட்டி.
ஓ.மு.எண்:4338/2025
லட்சுமியம்மாள்
க/பெ.பாண்டி, த/பெ.லேட்.குருசாமி
3/40ஏ,வாட்டர் டேங்க் ரோடு
அய்யனார் காலனி, சிந்துராஜபுரம்,
சிவகாசி, சிவகாசி வட்டம்
விருதுநகர் மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் கருப்பாயி அம்மாள், க/பெ. குருசாமி என்பவர் கடந்த 09.10.2010-ம் தேதி மதுரை மாவட்டம்,பேரையூர் தாலுகா,வே.சத்திரப்பட்டி கிராமத்தில் உள்ள எங்களது பூர்வீக வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
லட்சுமியம்மாள்
சிந்துராஜபுரம், சிவகாசி.

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், பழனி
சி.ப. 172/25/ஆ3
நாள்:19.11.25
திருமதி.ரோசி,
க/பெ.லேட்.குழந்தைவேல்,
7-வது வார்டு, சின்னக்கடை வீதி,
நெய்க்காரபட்டி,
பழனி வட்டம்-624 615
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதார்
-எதிர்-
கோட்டாட்சியர் அவர்கள்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
பழனி-624 601.
... எதிர்மனுதார்

மனுதாரர் தரப்பு அறிவிப்பு

மனுதாரர் தனது பெரியம்மா பாப்பா என்பவர் ஷை முகவரியில் கடந்த 10.11.2002-ம் தேதி இறந்துவிட்டார் என்றும் ஷை இறப்பினை பதிவு செய்யக் கோரி பழனி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து சி.ப. 172/25/ஆ3 நாள்:19.11.25 என நம்பராகியுள்ளது. யாருக்காவது ஷையாரின் இறப்பினை பதிவு செய்வதில் ஆட்சேபணை இருப்பின் 15 தினங்களுக்குள் பழனி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறிவிக்கலாயிற்று

மனுதாரர் பெயர் மற்றும் முகவரி
திருமதி.ரோசி, செல்:6385259506
க/பெ.லேட்.குழந்தைவேல்,
7-வது வார்டு, சின்னக்கடை வீதி,
நெய்க்காரபட்டி,
பழனி வட்டம்-624 615
திண்டுக்கல் மாவட்டம்.

மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், மதுரை.
I.A.No: 1 / 2025 in
A.S.No: --- / 2025
R.அய்யனார், த/பெ.ராமசாமி,
புது சுக்காம்பட்டி கிராமம்,
மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம்.
--- மனுதாரர் / மேல்முறையீட்டு மனுதாரர்
--- எதிர் ---
V.மனோகரன், த/பெ.வடிவேல் நாடார்,
வார்டு எண்.1, பழைய சுக்காம்பட்டி
மெயின் ரோடு, மேலூர் டவுன்,
மதுரை மாவட்டம்.
--- 2-ம் எதிர்மனுதாரர் / 2-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் / மேல்முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு I.A.No: 1 / 2025 in Un Numbered A.S.No: --- / 2025-ல் மேற்படி 2-ம் எதிர்மனுதாரர் / 2-ம் எதிர்மனுதாரர் ஆஜராகுவதற்கு 08.01.2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி தினம் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

I.சாலியாகான்,
P.வீராச்சாமி,
வழக்கறிஞர்கள், மதுரை.

